| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 09.04.2026 | |
| CC No. 109/2025 | |
| சாட்சி :PW2 | |
| பெயர் : திருமதி. லியோனியா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. மார்டின்ரூபன் | தொழில் : காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் : திருச்சி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 32/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது மணப்பாறை காவல்நிலையததில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அயல் பணியாக அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பாக கவனித்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் மகாலெட்சுமி அவர்கள் பணிமாறுதல் பெற்று வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறார். அவருடன் பணிபுரிந்த வகையில் அவரது கையொப்பம் மற்றும் எழுத்து நடை உள்ளிட்டவை எனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் இவ்வழக்கின் நீதியின் நலன் கருதியும், காலவிரயத்தை தவிர்க்கும் பொருட்டு அவருக்காக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 23.08.2022-ம் தேதியன்று திருமதி.மகாலெட்சுமி அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது கௌசல்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பதிவு செய்யப்பட்ட மனுவினை விசாரணை செய்து அந்த புகாரின் அடிப்படையில் மணப்பாறை அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.20/2022 சட்டப்பிரிவுகள் 498(A),494, 506(1) இ.த.ச. பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாருடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 மற்றும் 3 ஆகும்.** தொடர்ந்து இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அவர் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

**2.** சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடிய போது அவர்கள் தலைமறைவாக இருந்ததால் கைது செய்ய இயலவில்லை. இவ்வாறாக புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக 09.02.2023 அன்று கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**3.** விசாரணை அதிகாரி சம்பவம் இடம் செல்லாமல் சாட்சிகள் யாரையும் விசாரணையும் செய்யாமல் அனைத்து ஆவணங்களையும் நிலையத்தில் இருந்து கொண்டு தயார் செய்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

4. பொதுவாக குடும்பம் தொடர்பான வழக்குகளில் புகார் வந்தால் இருதரப்பு பெற்றோர்களையும் விசாரிப்பது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் அது போன்று விசாரித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரி மனோகரன் என்பவர் 2ம் திருமணம் செய்ததாக போட்டோ அல்லது வேறு ஏதாவது ஆவணம் கொடுத்தார்களா என்றால் இல்லை. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.